www.Padasalai.Net www.TrbTnpsc.com

VNR7S

விருதுநகர் மாவட்டம்

தொகுத்தறித் தேர்வு - 2025

-----

வகுப்பு 7

காலஅளவு: 2.00 மணிநேரம் **அறிவியல்** மதிப்பெண்கள்: 60

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **5×1=5**

1) ஒளி என்பது ஒரு வகை ..........

அ) பொருள் ஆ) ஆற்றல் இ) ஊடகம் ஈ) துகள்

2) நிலவானது பூமியை ஒரு சுற்று சுற்றி வர .......... நாட்களாகும்

அ) 25 ஆ) 26 இ) 27 ஈ) 28

3) வலுவான இழை .............. ஆகும்.

அ) ரேயான் ஆ) நைலான் இ) ஆக்ரிலிக் ஈ) பாலியஸ்டர்

4) மெழுகுவர்த்தி சுடரில் வெப்பமான பகுதி எது ..........

அ) நிலம் ஆ) மஞ்சள் இ) கருப்பு ஈ) உள்பகுதி

5) பட்டுப்பூச்சிகளை வளர்ப்பதும், பட்டு இழைகளை உருவாக்குவதும் ............ என அழைக்கப்படுகிறது

அ) ஹார்ட்டிகல்சர் ஆ) ஃபுளோரிகல்சர் இ) ஆக்ரிகல்சர் ஈ) செரிகல்சர்

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக** **5×1=5**

6) ஒரு சமதள ஆடியில் உருவாகும் பிம்பம் ............ ஆகும்.

7) சூரியமையக் கொள்கையை முன்மொழிந்தவர் ..........

8) சிறிய அலகுகளான பல ஒற்றைப் படிகளின் தொடர்ச்சியான சங்கிலித் தொடர் அமைப்பின் பெயர் .............. ஆகும்.

9) நீரில் நனைத்த காகிதத்தின் எரிவெப்பநிலை ............

10) அமைதிப்பட்டு ............ ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது

**III. சரியா? தவறா? தவறாக இருப்பின் திருத்தி சரியாக எழுது** **5×1=5**

11) ஊசித்துளை காமிராவில் தோன்றும் பிம்பம் தலைகீழ் பிம்பம் ஆகும்

12) நமது சூரியக் குடும்பத்திலுள்ள வெள்ளிக்கோளுக்கு நிலவு கிடையாது

13) அதிக அளவிலான நெகிழிகள் சுற்றுச் சூழலை பாதிக்கின்றன

14) வலிநிவாரணி என்பது காய்ச்சலின் போது வெப்பநிலையைக் குறைக்கும் பொருட்கள்

15) பட்டுப்பூச்சி கம்பளி இழைகளைத் தருகிறது

**IV. பொருத்துக** **5×1=5**

| | |
|---|---|
| 16) ஏழு வண்ணங்கள் | - ஆந்திரப்பிரதேசம் |
| 17) சந்திராயன் - 2 | - இழை |
| 18) நைலான் | - ORS தீர்வு |
| 19) ஆன்டாசிட் | - GSLV Mark III M1 |
| 20) அமைதிப்பட்டு | - நிறப்பட்டை |

www.Padasalai.Net

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



V. சுருக்கமான விடையளி (எவையேனும் 10 மட்டும்) 10×2=20

21) ஒளிரும் பொருள்கள் என்றால் என்ன?

22) ஒளியை உட்கவரும் பண்பினைப் பொருத்தி பொருள்களின் மூன்று வகைகள் யாவை?

23) முப்பட்டகம் என்றால் என்ன?

24) புவி மைய மாதிரி என்றால் என்ன?

25) PSLV மற்றும் GSLVன் விரிவாக்கம் தருக

26) நெகிழிகளையும், செயற்கை இழைகளையும் எரிப்பது நல்லதல்ல ஏன்?

27) 5R கொள்கை என்றால் என்ன?

28) மருத்துவர்களைக் கலந்தாலோசிக்காமல் ஏன் மருந்துகள் எடுக்கக்கூடாது?

29) எரிதல் வெப்பநிலை என்றால் என்ன?

30) 4.5 கிலோ எரிபொருள் முழுவதுமாக எரிந்து உற்பத்தி செய்யப்படும் வெப்பத்தின் அளவு 180000Kg என அளவிடப்படுகிறது என்றால் கலோரி பிக் மதிப்பு என்ன?

31) செரிகல்சர் வரையறு

32) ஆந்த்ராக்ஸ் நோயின் அறிகுறிகளை எழுதுக

33) கம்பளியின் சிறப்பம்சங்கள் மூன்றினை எழுதுக

34) உரை ஆவண மென்பொருளின் பயன்கள் யாவை?

35) ஒரு ஆவணத்தை எப்படி மூடலாம்?

VI. விரிவான விடையளி (எவையேனும் 4 மட்டும்) 4×5=20

36) ஒளிரும் மற்றும் ஒளிரா மூலங்கள் இவற்றிற்கிடையேயான வேறுபாட்டைக் கூறுக. ஒவ்வொன்றிற்கும் ஓர் எடுத்துக்காட்டு தருக

37) எதிரொளிப்பு மற்றும் நிழல் வேறுபடுத்துக

38) வெள்ளியின் வளர் மற்றும் தேய் நிலைகளைக் குறித்து விளக்குக

39) செயற்கை இழைகளின் பயன்களையும், வரம்புகளையும் பட்டியலிடுக

40) மெழுகுவர்த்தி சுடரின் படம் வரைந்து பாகம் குறி

41) அகிம்சை பட்டு பற்றி விவரிக்க.

- - - - -

www.Padasalai.Net

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com